# *சிந்திக்கல்லூரி கலை மற்றும் அறிவியல்*
# *தமிழ்த்துறை*
# *ஐந்து நாட்கள் பன்முகப் பயிற்சிப் பட்டறை*
# *(23.11.2021-27.11.2021)*

*சிந்திக்கல்லூரி தமிழ்த்துறையில் இளங்கலை தமிழ் பயிலும் மாணவர்கள் பல்துறை செய்திகளை அறிந்து தங்களது அறிவை விரிவு செய்யும் பொருட்டு திறமையான பேராசிரியர்களைக் கொண்டு 23-11-2021 முதல் 27-11-2021 வரை பன்முக பயிற்சிப் பட்டறை நடத்த திட்டமிட்டு, மாணவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.*






*இப்பயிற்சிப் பட்டறையில் முதல் நிகழ்வாக செவ்வாய்க்கிழமை 23-11-2021 காலை 10 மணி அளவில் தொடக்கவிழா தொடங்கியது. இவ்விழாவில் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர்த.பிரகலாதன் முன்னிலை உரை நிகழ்த்தி இவ்விழாவினைத் தொடங்கி வைத்தார். கல்லூரியின் பொறுப்பு முதல்வர், முனைவர் V. ஹேமலதா தலைமை உரை நிகழ்த்தினார். தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் முனைவர் டே.மேரி ஆரோக்கிய கிளீட்டஸ் கலா வரவேற்புரையும் முனைவர் சி.பு.இந்துஜா நன்றிரையும் வழங்கினர். இந்தத் தொடக்கவிழா நிகழ்வினை செல்வி மு.பவித்ரா மூன்றாமாண்டு மாணவி தொகுத்து வழங்கினார்.*

*இரண்டாம் நாள் 24-11-2021 முதல் அமர்வில் முனைவர் பெ.சுபா கவிதை இலக்கியம் என்னும் தலைப்பிலும் இரண்டாம் அமர்வில் திரு ச.கார்த்திக் படைப்பிலக்கியம் என்னும் தலைப்பிலும் உரை நிகழ்த்தினர். மூன்றாம் நாள் 25-11-2021 முதல் அமர்வில் முனைவர் அ.ஜெயபால் நாட்டுப்புறவியல் குறித்தும் முனைவர் த. கார்த்திகேயன் திரை இசைப்பாடல்கள் குறித்தும் உரை நிகழ்த்தினர். நான்காம் நாள் 26-11-2021 சுவடியியல் என்னும் தலைப்பில் சுவடிகள் பற்றிய செய்திகளை முனைவர் வெ.டில்லிபாபுவும் தமிழக வரலாறும் பண்பாடும் என்னும் தலைப்பில் முனைவர் சி.பு.இந்துஜாவும் உரையாற்றினர்.இதன் தொடர்ச்சியாகப் பிற்பகல் 12.30 மணிக்கு நிறைவு விழாதொடங்கியது.*

*23-11-2021 முதல் அமர்வில் முனைவர் க.வாணிஜோதி பேச்சுக்கலை என்னும் தலைப்பிலும் இரண்டாவது அமர்வில் முனைவர் கௌ. பெருமாள் எழுத்துக்கலை என்னும் தலைப்பிலும் உரை நிகழ்த்தினர். தொடக்க விழாவினைத் தொடர்ந்து பிற்பகல் 12.30 மணிக்கு முதல்நாள் முதல் அமர்வு தொடங்கியது. இந்நிகழ்வை தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் த.பிரகலாதன் தனது முன்னிலை உரையில் பேச்சுக்கலை பற்றிய அறிமுகத்தை வழங்கினார்.*

இவரைத் தொடர்ந்து பொழிவாளர் முனைவர் க.வாணிஜோதி பேச்சுக்கலை பற்றி உரையாற்றினார். மூன்றாம் ஆண்டு மாணவிகளான செ.குபேந்திரா பொழிவாளர் அறிமுகமும், அ.சித்ரா வரவேற்புரையும் வழங்கினர். இப்பயிற்சிப் பட்டறையில் தமிழ்த்துறை இளங்கலை மாணவர்களும் மற்றும் தமிழ்த்துறைப் பேராசிரியர்களும் கலந்து கொண்டனர்.








எழுத்துக்கலை என்னும் தலைப்பில் முனைவர் கௌ.பெருமாள் எழுத்துக்களின் இன்றியமையாமை, காற்புள்ளி, அரைப்புள்ளி போன்ற நிறுத்தற்குறியீடுகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். மூன்றாம் ஆண்டு மாணவிகளான இ.அபிநயா தொகுப்புரையும் அ.சித்ரா பொழிவாளர் அறிமுகமும் செ.குபேந்திரா நன்றி உரையும் வழங்கினர்.






முனைவர் பெ.சுபா கவிதைக்கலை என்னும் தலைப்பில் உரை நிகழ்த்தினார். புதுக்கவிதை எழுதும் நுட்பங்களைவிளக்கியும் புதுக்கவிதைகளை வாசித்தும் மாணவர்களுக்கு உரை நிகழ்த்தினார். மேலும் மாணவர்கள் புதுக்கவிதை எழுதும் நுட்பங்களை எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வில் தொகுப்புரை இ.அபிநயா, பொழிவாளர் அறிமுக உரை அ.சிவசங்கரன், நன்றியுரை சா. அபிதா மூன்றாம் ஆண்டு மாணவர்கள் வழங்கினர்.








படைப்பிலக்கியம் என்னும் தலைப்பில் திரு. சு.கார்த்திக் உரை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் தற்கால நாவல், சிறுகதையின் சிறப்புகளையும், வட்டார வழக்கோடு எழுதப்படுகின்ற நாவல்களின் உட்கருத்துக்களையும் கதைமாந்தர்களின் எதார்த்தமான சூழல்களையும் சிக்கல்களையும் எடுத்துரைத்தார்.மேலும் தற்கால சூழலில் சிறுகதை, நாவல் எழுதும் முறையை மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். மூன்றாம் ஆண்டு மாணவிகள்செள.திவ்யா பொழிவாளர் அறிமுகவுரை, மு.அபிநயப்ரியா நன்றிவுரை, இ.அபிநயா தொகுப்புரையும் வழங்கினர்.



முனைவர் அ.ஜெயபால் நாட்டுப்புறவியல் என்னும் தலைப்பில் உரை நிகழ்த்தினார்.இதில் நாட்டுப்புற மக்களின் வாழ்வியலோடு கலந்த தாலாட்டு, தெம்மாங்கு, ஒப்பாரி, நடவுப்பாடல்கள், பொழுதுபோக்கு போன்ற பல்வேறு பாடல்களின் சிறப்பை எடுத்துரைத்தார். மேலும் ஒரு சில நாட்டுப்புறப் பாடல்களைப் பாடியும் காட்டினார். இந்நிகழ்வில் மூன்றாம் ஆண்டு மாணவிகளான இ. அபிநயா தொகுப்புரையும், நா. பிரியா அறிமுக உரையும் வழங்கினர். நன்றியுரை இரண்டாம் ஆண்டு மாணவி கு.திவ்யா வழங்கினார்.






திரை இசைப் பாடல்கள் என்னும் தலைப்பில் முனைவர் த.கார்த்திகேயன் உரை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் இலக்கியங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வரிகளைக் கொண்டு திரை இசைக்கு ஏற்ப சொற்களை மாற்றி எளிமையான பாடல்களாக மாற்றி அமைத்துள்ளதை எடுத்துரைத்தார். நிகழ்ச்சித் தொகுப்பு இ.அபிநயா, அறிமுகவுரை மா.ரேவதி, நன்றி உரை ஐ.லோகப்பிரியா மூன்றாம் ஆண்டு மாணவர்கள் வழங்கினர்.





முனைவர் வெ. டில்லிபாபு சுவடியியல் என்னும் தலைப்பில் உரை நிகழ்த்தினார். இதில் இன்றைய இலக்கியங்கள் அனைத்தும் சுவடிகளிலிருந்து தோற்றம் பெற்றவை என்றும் இச்சுவடிகள் பனை ஓலையில் இருந்து உருவாக்கப்பட்டவை என்றும் எடுத்துரைத்தார். மேலும் பனை ஓலைகளைப் பதப்படுத்தி ஓலைகளில் முதன் முதலில் எழுத்துக்களை தமிழன் எழுதத் தொடங்கினான். பிறகு இலக்கியங்களை எழுத கற்றுக் கொண்டான். இன்றளவும் பல்வேறு ஓலைச்சுவடிகள் பல நிறுவனங்களால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதையும் எடுத்துரைத்தார். இந்நிகழ்வில் தொகுப்புரை ஐ.லோகப்ரியா, பொழிவாளர் அறிமுக உரை சா.அபிதா, நன்றி உரை அ. சித்ரா மூன்றாம் ஆண்டு மாணவிகள் வழங்கினர்.








தமிழக வரலாறும் பண்பாடும் என்னும் தலைப்பில் முனைவர் சி.பு.இந்துஜா உரை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் பழந்தமிழரின் பண்பாட்டுக் கூறுகளையும் இனக்குழுத் தலைவன், குரறுநில மன்னன், வேந்தர் இந்த நிலையில் தமிழகத்தை ஆட்சி செய்த பல்வேறு மன்னர்களின் வரலாறுகளை மக்களின் வாழ்வியலோடு எடுத்துரைத்தார்.மூன்றாமாண்டு மாணவர்களான மு.பவித்ரா தொகுப்புரையும், மு.அபிநயப் பிரியா பொழிவாளர் அறிமுக உரையும் அ.சித்ரா நன்றியுரை வழங்கினர்.



*முனைவர் டே. மேரி ஆரோக்கிய கிளீட்டஸ் கலா இலக்கணம் என்னும் தலைப்பில் உரை நிகழ்த்தினார். புறப்பொருள் வெண்பாமாலை,யாப்பருங்கலக்காரிகை, அகப்பொருள் விளக்கம், நன்னூல் போன்ற நூல்களிலிருந்து யாப்பு, எழுத்து, அசை, சீர், அணி, பாவகை போன்ற பல்வேறு செய்திகளை எடுத்துரைத்தார். மேலும் அகத்திணை, புறத்திணைகளையும் விரிவாக எடுத்துரைத்தார். மூன்றாம் ஆண்டு மாணவிகள் இ. அபிநயா தொகுப்புரையும் மா. ரேவதி பொழிவாளர் அறிமுக உரையும் சா. அபிதா நன்றி உரையும் வழங்கினர்.*



*நிறைவு விழாவின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து தமிழ்த்துறை மாணவர்கள் வழங்கினர். முனைவர் டே. மேரி ஆரோக்கிய கிளீட்டஸ் கலா. வரவேற்புரை வழங்கினார். முனைவர் த. பிரகலாதன் முன்னிலை உரையும், முனைவர் V. ஹேமலதா (முதல்வர் பொறுப்பு) தலைமை உரையாற்றினர். நிறைவு விழாவில் உரையாற்றிய பேராசிரியர்களுக்கும் ,பங்கேற்ற மானவர்களுக்கும் சான்றிதழ் வழங்கபட்டது. தொகுப்புரை அ.சித்ராவும், நன்றியுரை ஐ.லோகப்பிரியாவும் வழங்கினர். நாட்டுப்பண் தமிழ்த் துறை மாணவர்கள் பாடியதோடு நிகழ்ச்சி நிறைவு பெற்றது.*